நாள் 20.01.2025 **CC 332/2019** அ.சா. 3

பெயர் மயிலாத்தாள்

**1**ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

**2** முதல் **4** எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

(எதிரிகள் தரப்பில் 348 BNSS பிரிவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சிக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதால் Microsoft teams செயலி மூலம் சாட்சி ஆஜராக அனுமதி வழங்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு Microsoft teams செயலி மூலம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது)

(1) எனது கணவர் பெயர் தங்கவேல் என்றால் இல்லை காளிமுத்து ஆகும். நான் முள்ளங்கி வலசில் வசித்து வருகிறேன். நான் 4/45, உச்சிமாகாளியம்மன் கோவில், மலையாண்டிபட்டினம், குரல்குட்டை அஞ்சல் உடுமலையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சரஸ்வதி எனது உடன் பிறந்த சகோதரி என்றால் அவர் என் தங்கை ஆவார். கன்னிமுத்து எனது தங்கையின் கணவர் கொழுந்தனார் என்றால் சரிதான். அணைத் தோட்டம், கருப்பட்டிபாளையம், பாப்பான்குளம் அஞ்சலில் வசிக்கும் மயிலாத்தாள் என்பது நான் கிடையாது என்னுடைய முகவரி அது அல்ல அங்கு வசிப்பது கன்னிமுத்துவின் அண்ணன் மனைவி மயிலாத்தாள் என்றால் சரிதான். எனது ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை நீதிமன்றத்தில் அளிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். கன்னிமுத்துவின் அண்ணன் காளிமுத்து கவுண்டரின் மனைவி பெயர் மயிலாத்தாள் என்றால் சரிதான்.

(2) மேற்படி காளிமுத்து கவுண்டரின் மனைவி மயிலாத்தாள் தான் அணைத் தோட்டம், கருப்பட்டிபாளையத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். காளிமுத்துவும், கன்னிமுத்துவும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். காளிமுத்து மனைவி மயிலாத்தாளுக்கு கன்னிமுத்து மச்சாண்டார் முறை என்றால் சரிதான். கன்னிமுத்து தோட்டமும், காளிமுத்து தோட்டம் பக்கம், பக்கம் என்றால் சரிதான் ஒரே பொழி தான். நான் எப்போதும் கருப்பட்டிபாளையத்தில் வசித்து வந்தது கிடையாது நான் மலையாண்டிப்பட்டிணத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். காளிமுத்து

மனைவி மயிலாத்தாள் நான் கிடையாது நான் தங்கவேல் மனைவி மயிலாத்தாள் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டது போல் நான் வழக்குச் சம்பவத்தை பார்க்காமல் பார்த்ததாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், சாட்சியின் ஆவணங்களை குறியீடு செய்யவும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**நீதிமன்ற கேள்வி –** எந்த வழக்கு சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

**பதில் –** செல்வராஜ், கருப்புச்சாமி, கண்ணன், கலைச் செல்வி ஆகியோர்கள் காட்டிற்கு கிட்ட நான் மேல்புறம் மாடு மேய்த்துக்கொண்டிருந்தேன். கண்ணன் காட்டிற்கு மேல்புறம் எனது காடு தற்போதும் உள்ளது. கருப்பட்டிபாளையத்திற்கு மலையாண்டிபட்டிணத்திற்கும் 5 மைல் இருக்கும். நான் தற்போது மலையாண்டிபட்டிணத்தில் உள்ள வீட்டில் உள்ளேன். எனக்கும், எனது கணவருக்கும் கண்ணன் காட்டிற்கு மேல்புறம் 7 ஏக்கர் தோட்டம் உள்ளது விலைக்கு வாங்கினோம். நாங்கள் கருப்பட்டிபாளையத்திற்கு குடி போகவில்லை. மலையாண்டிபட்டிணத்தில் காடு எதுவும் இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.01.20 08:35:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்